பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**02 02 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று ஒடிசா செல்கிறார்.

2. சர்வதேச சந்தை வாய்ப்புகளைப் பெறும் வகையில் இந்திய தயாரிப்புகள் தரமாக இருப்பதை தொழில்துறையினர் உறுதி செய்ய வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

3. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை முப்படைகளுக்கு இடையேயான சிறப்பான ஒத்துழைப்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

4. பாஸ்பேட், பொட்டாசியம் உரங்களுக்கு ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய திட்டத்திற்கு மத்திய பட்ஜெட் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

5. சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டியில் சர்வீசஸ் அணி காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஒடிசா மாநிலம் பாலசோரில் உள்ள **Fakir Mohan** பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பங்கேற்கிறார்.

**6** நாள் பயணமாக ஒடிசா செல்லும் குடியரசுத்தலைவர், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஒடிசா மாநில அரசின் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் விடுதி, வில்வித்தை பயிற்சி மையம், நகர்ப்புற சீரமைப்பு மற்றும் பாதாள சாக்கடை மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கும் திருமதி திரௌபதி முர்மு அடிக்கல் நாட்டுகிறார்.

<<<<>>>>

சர்வதேச சந்தை வாய்ப்புகளைப் பெறும் வகையில் இந்திய தயாரிப்புகள் தரமாக இருப்பதை தொழில்துறையினர் உறுதி செய்ய வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், பின்னலாடை, விளையாட்டு மற்றும் இதர துறைகளில் ஆங்கிலேய ஆட்சிக்கு முந்தைய பெருமையை

மீண்டும் நிலைநாட்டும் வகையில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

முன்னதாக துறவி குரு ரவிதாசின் 649வது பிறந்த தினத்தை முன்னிட்டு பிரதமர் அவருக்கு மரியாதை செலுத்தினார்.

இதனிடையே லூதியானாவில் உள்ள Halwara விமான நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய முனைய கட்டிடத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி காணொலி மூலம் திறந்து வைத்தார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை முப்படைகளுக்கு இடையேயான சிறப்பான ஒத்துழைப்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய கடலோர காவல்படையின் 50வது நிறுவன தின நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த நடவடிக்கை கடல்சார் பாதுகாப்பு அமைப்பின் பன்முகத்தன்மையை உலகறியச் செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

கடல்சார் பாதுகாப்பில் இந்திய கடலோர காவல்படையின் செயல்பாடுகள் நம்பிக்கை அளிப்பதாக உள்ளது என்று அவர் கூறினார்.

மேற்கு கடற்கரையோர பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையிலான இந்திய கடலோர காவல்படை உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதற்கு திரு. ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்தார்.

<<<<>>>>

அரசின் சீர்திருத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதை கருத்தில் கொண்டு மத்திய பட்ஜெட் உருவாக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு இது வகை செய்யும் என்று கூறினார்.

மூலதன செலவினங்களுக்காக உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 4 புள்ளி 4 சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த 10 ஆண்டுகளில் அதிக நிதி ஒதுக்கீடு இது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு இந்த பட்ஜெட் உத்வேகம் அளிக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தொழில்நுட்பம் சார்ந்த நடவடிக்கைகள் சமானிய மக்களுக்கு பயனளிப்பதாக இருப்பது உறுதி செய்யப்படும் என்று அவர் கூறினார்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களின் மேம்பாட்டிற்காக ஆண்டுதோறும் ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

பாஸ்பேட், பொட்டாசியம் உரங்களுக்கு ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய திட்டத்திற்கு மத்திய பட்ஜெட் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உர உற்பத்தி சார்ந்த நடவடிக்கைகளுக்காக மத்திய பட்ஜெட்டில் ஒன்று புள்ளி ஏழு லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வேளாண் உற்பத்தி சார்ந்த நடவடிக்கைகளுக்கு உத்வேகம் அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கு மத்திய பட்ஜெட் அடித்தளம் அமைத்தள்ளதாக வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உற்பத்தி துறைக்கு பட்ஜெட்டில் உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

புதிய தொழில் நிறுவனங்கள், முதலீடுகளுக்கு இந்த பட்ஜெட் உதவிடும் என்று திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

காதி, கைத்தறி மற்றும் கைவினைத் தொழில்களுக்கு மத்திய பட்ஜெட் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவிட்டுள்ள அவர், மகாத்மா காந்தி கிராம ஸ்வராஜ் திட்டத்தின் மூலம் நெசவாளர்களுக்கு சிறந்த பயிற்சி அளிப்பதுடன், உள்ளூர் தயாரிப்புகளுக்கு சர்வதேச அளவில் சந்தை வாய்ப்புகளையும் உருவாக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

கிராமப்புற பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மத்திய பட்ஜெட் வடிவமைக்கப்பட்டுள்ளதாக திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

கொள்கலன் உற்பத்திக்கான மூதலீடாக மத்திய பட்ஜெட்டில் 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,

வரவேற்புக்குரியது என்று மத்திய நீர்வழிப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பட்ஜெட் உள்நாட்டு பொருளாதாரத்திற்கு வலு சேர்ப்பதுடன், இறக்குமதி சார்ந்திருக்கும் நிலையை வெகுவாக குறைக்க உதவிடும் என்றும் அவர் கூறினார்.

வேலைவாய்ப்பு உருவாக்கம், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மேம்பாடு, விவசாயிகளின் நலன், விளிம்பு நிலை மக்களுக்கு அதிகாரம் அளித்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நீர்வழிப் போக்குவரத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு இந்த பட்ஜெட் வடிவமைக்கப்பட்டுள்ளதாக திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானம், நாடாளுமன்ற இரு அவைகளிலும் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

மக்களவையில் இந்த தீர்மானத்தை மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் முன்மொழிகிறார்.

இதனை பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தேஜஸ்வி சூர்யா வழிமொழிகிறார்.

மாநிலங்களவையில் குடியரசுத்தலைவர் உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சதானந்தன் மாஸ்டர் முன்மொழிகிறார்.

<<<<>>>>

வரி ஏய்ப்பில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்களை கொண்டுள்ளதாக இந்த பட்ஜெட் அமைந்துள்ளது என்று சென்னையை சேர்ந்த பலர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

**(Sound Byte 1 - Public - 57 Sec)**

மத்திய பட்ஜெட்டில் நீர்வழிப் போக்குவரத்தை மேம்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு உதவிடும் என்று விருதுநகரை சேர்ந்த பயனாளர் ஒருவர் தெரிவிக்கிறார்.

**(Sound Byte 2 - Public - 42 Sec)**

<<<<>>>>

இந்திய கடற்படை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட அரை மாரத்தான் ஓட்டத்தை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.

மன்சுக் மாண்டவியா மற்றும் கடற்படை அட்மிரல் தினேஷ்குமார் திரிபாதி ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் இளைஞர்களை இந்திய கடற்படையில் சேர்வதற்கு உத்வேகம் அளிக்க இத்தகைய நிகழ்ச்சிகள் வழிவகுப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

உடல்நலத்தைப் பேணுவது, ஒழுக்கம் மற்றும் நாட்டின் பெருமையை எடுத்துரைக்கும் நோக்கில் இந்த அரை மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டியில் சர்வீசஸ் அணி காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெறும் காலிறுதி ஆட்டங்களில் தமிழ்நாடு - பஞ்சாப் அணியையும், அசாம் - கேரளா அணியையும், ராஜஸ்தான் - ரயில்வே அணியையும், பெங்கால் - சர்வீசஸ் அணியையும் எதிர்கொள்கின்றன.

--------------

ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டி புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

**<<<<The End>>>>**